**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 -ம் நாள் வியாழன்கிழமை

**O.S. No. 138 /2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW. 1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | துரைசாமி | கிராமம் | : | புளிச்சக்காடி |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 65 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

பிரதிவாதி தனது தாயாருடன் 2015 முதல் 2020 வரை வழக்கு சொத்தான புல எண் 56/6 ல் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி புல எண் 56/6 ல் வீட்டினை நான் 2020 ல் பழுதாகிவிட்டது என்று இடித்தேன் என்றால் சரிதான். 2020 ம் ஆண்டு பிரதிவாதியை நான் தான் வீட்டிலிருந்து விரட்டிவிட்டு வீட்டை இடித்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான புல எண் 57/7 ன் நிலத்தினை பிரதிவாதிக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. புல எண் 57/7 ல் மீன் குட்டகைக்காக வெட்டிய மணலினை புல எண் 57/6 மற்றும் 57/42 ஆகிய இடங்களில் மணலினை கொட்டி நிரப்பினேன் என்றால் சரிதான். வழக்குரையில் புல எண் 56/6 நிலத்தினை வழக்கு சொத்தாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. புல எண் 57/7 ல் பிரதிவாதியின் பெயரில் தான் பட்டா உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புல எண் 56/65 எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். புல எண் 57/7 நிலத்தினை அதன் முன்னாள் உரிமையாளரான கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து பிரதிவாதி முறையாக பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் மூலம் கிரயம் பெற்று பிரதிவாதி அனுபவித்து வரும் நிலத்தினை நான் ஆக்கிரமிப்பு செய்வதற்காக மீன் குட்டை அமைத்து ஆக்கிரமிக்க முயற்சிசெய்துவருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புல எண் 57/7 ல் பட்டாவினை கிருஷ்ணமூர்த்தி என்பவர் பெயரிலிருந்து பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. இதற்கு முன்பு செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் மகாதேவ அய்யர் குமாரர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை தெரியாது என்றும் வைத்தியநாதன் வளர்ப்பு மகனான கிருஷ்ணமூர்த்தி என்பவரை தெரியும் என்றும் உண்மைக்கு மாறாக சாட்சியமளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் தொடர்பில்லாத பாலையன் என்பவரிடமிருந்து புல எண் 57/7 ஐ நான் வாய்மொழியாக கிரயம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.02 16:13:58 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.